**5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்**

**( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)**

**MCOP No.2657/2022**

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | மசா.1 |
| பெயர் | மாலதி |
| க/த.பெயர் | வசீகரன் |
| வயது | 25 |
| விலாசம் | நுங்கம்பாக்கம், சென்னை |
| தொழில் | - |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 25.02.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**கூடுதல் முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் முதல் மனுதாரர் ஆவேன். வாகன விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். இதில் என்னை எனது தரப்பில் முதல் சாட்சியாக விசாரித்து கொண்டு 17 ஆவணங்களை குறியீடு செய்துள்ளேன். தற்போது குற்றப்பத்திரிக்கை மசாஆ18, விபத்து பதிவு சான்றிதழ் மசாஆ19, வரைபடம் மசாஆ20, எதிர்மனுதாரரின் வாகன அனுமதி சான்றிதழ் மசாஆ21, மனுதாரரின்

மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் மசாஆ22, எதிர்மனுதாரரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் மசாஆ23, பார்வை மகசர் மசாஆ24, காயச்சான்றிதழ் மசாஆ25.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்கனவே நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோது ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் இந்த ஆவணங்கள் தற்போது தான் எனக்கு கிடைத்தது. மசாஆ20 ஆவணம் வரைபடம் குறித்து எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரிதான்.

சாட்சி காணொளியின் வாயிலாக சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

**<u>5 வது நீதிபதி</u>**
**<u>சென்னை</u>**